**கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஜெயங்கொண்டம்.**

முன்னிலை: **திரு. ம.சி. கண்ணதாசன் எம்.எல்.,**
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**2026 ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17–ம் நாள் வெள்ளிக்கிழமை**
**I.A.07/2025 in OS.188/2019**

காசிநாதன் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

வெங்கடேசன் ... எதிர்மனுதாரர்/பிரதிவாதி

இம்மனு கடந்த 05.03.2026 தேதியன்று என் முன்பு இறுதி விசாரணைக்கு வந்ததில் மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.T.ஜெய்சங்கர் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.M.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதம் கேட்டும், மனு, பிரமாணவாக்குமூலம் மற்றும் எதிருரை ஆகியவற்றை பரிசீலித்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்...

**உத்தரவு**

1. இம்மனுவானது மனுதாரர்/வாதி தரப்பில் கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டியுள்ளதால், மனுதாரர்/வாதி சாட்சியத்தை Re–open செய்து அனுமதியளித்து உத்தரவாக வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**மனுதாரரின் மனுவின் சுருக்கம்:–**

2. இம்மனுவின் மனுதாரர் அசல் வழக்கில் வாதி என்றும், மனுதாரர் எதிர்மனுதாரரருக்கு எதிராக நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்காக வழக்கு தாக்கல் செய்து, மேற்படி வழக்கில் மனுதாரராகிய தன்னை வா.சா.1 ஆக முதல் விசாரணை செய்து நிரூபண வாக்குமூலம் பதிவு செய்து உள்ளார் என்றும், மேற்படி முதல் விசாரணை வழக்கு தாக்கல் செய்த போது மனுதாரர் தாக்கல் செய்த ஆவணங்களை மட்டும் குறியீடு செய்துவிட்டார் என்றும், தற்சமயம் மனுதாரர் வசம் ஒரு சில ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி ஆவணம் கைவசம் இல்லாததால் மனுதாரர் தரப்பில் மனுதாரரை முதல்விசாரணை செய்யும் போது தாக்கல் செய்ய

இயலவில்லை என்றும், மேற்படி ஆவணம் தற்சமயம் தான் கிடைக்கப்பெற்றது என்றும், ஆவணம் வழக்கிற்கு அவசியமானதும், மேற்படி ஆவணத்தை எனது தரப்பில் குறியீடு செய்ய வேண்டியுது அவசியமாகிறது என்றும், மனுதாரர் வேண்டுமென்றோ, அலட்சியமாகவோ தாக்கல் செய்யாமல் இல்லை என்றும், இது தெய்வாதீனமாக நடந்த ஒன்று என்றும், எனவே மனுதாரர் தரப்பில் கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டியுள்ளதால் மனுதாரர் சாட்சியத்தை Re-open செய்து அனுமதியளித்து உத்தரவாக வேண்டும் என்று மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்**

3. மனுதாரரின் மனு சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல என்றும், மேற்படி வழக்கு தாக்கல் செய்த காலத்தில் மனுதாரரின் தந்தை தாவா 1வது அயிட்ட சொத்தை கடந்த 07.06.1970ம் தேதி கிரையம் பெற்றுள்ளார் என்பது சரியல்ல என்றும், மேற்படி கிரையம் பெற்ற ஆவணத்தை தாக்கல் செய்யாமல் விடுபட்டுவிட்டது என்பதும், மேற்படி ஆவணம் விடுப்பட்ட போன விவரம் மனுதாரருக்கு தற்போது தான் தெரியவந்தது என்றும், மேற்படி ஆவணம் வழக்கிற்கு அவசியமான ஆவணம் ஆகும் என்பதும், அதனை தவறுதலாக தாக்கல் செய்யாமல் வழக்கு காலத்தில் விட்டுவிட்டார் என்பதும் சரியல்ல என்றும், மனுதாரர் எதிர்மனுதாரர் மீது வழக்கு தாக்கல் செய்துவிட்டு வழக்கை நடத்தாமல் வேண்டுமென்றே காலம் தாழ்த்தி வருகிறார் என்றும், தற்போது தாக்கல் செய்துள்ள ஆதாரங்களை மனுதாரர் கைவசம் வைத்துக்கொண்டே எதிர்மனுதாரரை அலைகழிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்துடன் இந்த மனுவை தற்போது நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார் என்றும், மனுதாரருக்கு நல்ல கட்சி கிடையாது என்றும், மேற்படி வழக்கில் ஏற்கனவே வழக்குரை தாக்கல் செய்யும் போது ஆவணங்கள் விடுபட்டுவிட்டது என்று I.A.04/2023 மனு தாக்கல் செய்துள்ளார் என்றும், ஆனால் மனுதாரர் மீண்டும் வழக்கை காலம் தாழ்த்த வேண்டுமென்றே இதுபோன்றே ஆவணங்கள் தாக்கல் செய்யவேண்டுமென மறுபடியும் ஆவணங்கள் குறியீடு செய்ய மனுதாக்கல் செய்துள்ளார் என்றும், மேற்படி மனு ஏற்கத்தக்கதல்ல என்றும்,

ஆகையால் மனுதாரரின் மனுவை எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்று எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4. இருதரப்பு வாதம் கேட்கப்பட்டது. இருதரப்பிலும் சாட்சிகள் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணம் குறியீடு செய்யப்படவில்லை.

5. இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை யாதெனில், இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா? என்பது தான்.

<u>பிரச்சனைக்கான தீர்வு:-</u>

6. மனுதாரர் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் மனு சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை அனுமதிக்க வேண்டும் என்றும், எதிர்மனுதாரர்கள் தரப்பில் ஆஜரான கற்றறிந்த வழக்கறிஞர் எதிருரை சங்கதிகளை குறிப்பிட்டு இம்மனுவை தள்ளுபடி செய்யவேண்டும் என்றும் வாதிட்டனர்.

7. மனு, எதிருரை, இருதரப்பு வாதம் மற்றும் வழக்கு கோப்பினை பரிசீலனை செய்ததில் கடந்த 13.03.2023 அன்று எழுவினாக்கள் வனையப்பட்டு, அதன்பிறகு விசாரணை பட்டியலுக்கு மாற்றப்பட்டு கடந்த 03.01.2024 அன்று வாதி தரப்பில் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.9 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதன்பிறகு வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக வாய்தா கடந்த 19.01.2024 மாற்றப்பட்டு, பின்பு கடந்த 20.02.2025 அன்று வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக பல வாய்ப்புக்கள் வழங்கப்பட்ட போது வா.சா.1 ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் எவ்வித எடுத்துரைப்பும் இல்லாத காரணத்தினால் பிரதிவாதி தோன்றாத் தரப்பினராக்கப்பட்டு, வாதி தரப்பு இதர சாட்சியத்திற்காக வாய்தா உள்ள நிலையில் பிரதிவாதிக்கு எதிராக ஏற்பட்ட எக்ஸ்பார்ட்டி உத்தரவை ரத்து செய்ய மனு தாக்கல் செய்து I.A.6/25 அனுமதிக்கப்பட்டு, வா.சா.1 குறுக்கு விசாரணைக்காக கடந்த 10.11.2025 வாய்தா இருந்த நிலையில் தற்போது கூடுதல் ஆவணங்கள் குறியீடு செய்ய வேண்டி வாதி இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுதாரர் கோரியுள்ள மனு ஏற்புடையதல்ல, நிலைக்கத்தக்கதல்ல என்றும், வழக்கு விசாரணையை காலதாமதம் செய்ய வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளதால், மனுதாரரின் மனுவை

எதிர்மனுதாரரின் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்து உத்தரவாக வேண்டும் என எதிர்மனுதாரர் தரப்பில் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இருப்பினும், இந்நீதிமன்றம் விசாரணை நீதிமன்றம் என்பதால் தரப்பினர்களுக்கு அவரவர் தரப்பு கட்சியை முன்வைப்பதற்கு சந்தர்ப்பம் வழங்குவது அவசியமானது என்பதாலும், அப்பொழுதுதான் வழக்கின் உண்மை தன்மையை காண்பதற்கும், வழக்கின் தீர்க்கமான முடிவு ஏற்படுவதற்கும், பல வழக்குகள் ஏற்படும் நிலையை தடுப்பதற்கும் வாய்ப்பாக அமையும் என்றும், மேற்படி வழக்கானது நிலுவையில் இருந்து வருவதை கருத்தில் கொண்டும் மனுதாரரின் மனுவினை அனுமதிக்கப்பட வேண்டியது தான் நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் என்று கருதி அதன்படியே இப்பிரச்சனைக்கு தீர்வு காணப்படுகிறது.

8. **எனவே முடிவாக,** இம்மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியாக்கம் செய்யப்பட்டு என்னால் பிழைத்திருத்தம் செய்யப்பட்டு, 2026ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 17–ஆம் நாள் இன்று இந்நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

M S KANNADHASAN
Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.

**மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணம்:**

– இல்லை –

M S KANNADHASAN
Digitally signed by M S KANNADHASAN

கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி,
ஜெயங்கொண்டம்.